Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

THURSDAY, 15 AUGUST 2024

வியாழக்கிழமை ஆகஸ்ட் 15, 2024 | ஒளி: 10 கதிர் 029 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

2024 ஜனாதிபதித் தேர்தல்

# இன்று வேட்புமனு; 40 பேர் கட்டுப்பணம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்வது விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வியாழக்கிழமை (15) காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்று (15) வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்கப்படும். வேட்புமனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகளைக் காலை 11 மணி முதல் 11.30 மணி வரை தெரிவிக்கலாம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆட்சேபனை காலம் முடிந்ததும் கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்களுக்கான சின்னங்கள் வெளியிடப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதன்போது, தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதன் சுற்றுவட்டாரப் பகுதிக்கும் விசேட பாதுகாப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்கப்படும் போது, அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்படும்.

இந்நிலையில், 2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 40 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

கடந்த மாதம் 26ஆம் திகதி ஆரம்பமான ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை புதன்கிழமை(14) மதியம் 12 மணியுடன் நிறைவடைந்தது. வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் தினமான வியாழக்கிழமை (14) தேர்தல் ஆணைக்குழு வளாகம் மற்றும் அதனை அண்மிதுள்ள பகுதிகள் விசேட பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த பகுதி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் விசேட போக்குவரத்து திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.



# கையொப்பம் இட்டனர்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தொழில் அதிபரான திலித் ஜயவீர ஆகியோர், ஜனாதிபதி வேட்பு மனுக்களில் கையொப்பமிட்டனர். புதன்கிழமை(13), பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க, தன்னுடைய வேட்பு மனுவில், செவ்வாய்க்கிழமை (12) கையொப்பமிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தன்னுடைய வேட்பு மனுவில், வியாழக்கிழமை (15) கையொப்பமிடுவார் என எதிர்க்கட்சி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.



ஜனாதிபதியை தெரிவு செய்ய


# “வாய்ப்பு கிட்டியது”

2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பாடுபட்டதன் மூலம் 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கு இந்நாட்டு மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைத்து பாதுகாப்பு தரப்பு உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி தனது நன்றியைத் தெரிவித்தார்.

அத்துடன், சட்டம் ஒழுங்கை உறுதிப்படுத்தி நாட்டில் சுதந்திரமான தேர்தலுக்கு ஒத்துழைப்பது ஜனாதிபதி என்ற வகையில் தனதும் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகிய தரப்பினரதும் பொறுப்பு என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஸ்ரீ ஜெயவர்தனபுர விசேட அதிரடிப் படை நடவடிக்கை மையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் செவ்வாய்க்கிழமை (13) கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக

# மனுத்தாக்கல்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியற்றவர் என உத்தரவிடுமாறு கோரி சட்டத்தரணி ஷான் ரணசூரிய, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை புதன்கிழமை (14) தாக்கல் செய்துள்ளார்.

அரசியலமைப்பை ஜனாதிபதி வேண்டுமென்றே மீறியுள்ளமையினால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ரணில் விக்ரமசிங்க தகுதியற்றவர் என மனுவில் குறிப்பிட்டுள்ளார். செப்டம்பர் 21ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட ரணில் விக்ரமசிங்க தகுதியற்றவர் என்றும் இடைக்காலத் தடை உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறும் மனுவில் கோரியுள்ளார்.

தொடர்ச்சி P2

# சஜித்துக்கு பாட்டாலி ஆதரவு

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஐக்கிய குடியரசு முன்னணி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டது.

தலவத்துகொட கிராண்ட் மொனார்க் ஹோட்டலில் புதன்கிழமை (14) இடம்பெற்ற நிகழ்விலேயே இவ்வாறு இணைந்து கொண்டனர்.




# 3 நாள் தபால் வாக்கு பதிவு

2024 ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில் கொண்டு தபால் மூலம் வாக்களிக்கும் திகதிகளைத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்பு செப்டம்பர் 04, 05 மற்றும் 06ஆம் திகதிகளில் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# 30 பேரடங்கிய அணி ஜனாதிபதிக்கு ஆதரவு



30 பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய பொதுஜன ஐக்கிய முன்னணி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அந்த முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுர பிரியதர்சன யாப்பா, புதன்கிழமை (14) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ரூ.1,700க்கான வர்த்தமானி தமிழில் வெளியாகவில்லை

தேயிலை மற்றும் இறப்பர் தொழில்துறையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 1,700 ரூபாவை வழங்குவதற்கான 239727 என்ற இலக்கத்தை கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் செவ்வாய்க்கிழமை (13) அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தின் கீழ், தேயிலை வளர்ப்பு மற்றும் உற்பத்தி வர்த்தகத்திற்கான



ஊதிய சபை, இறப்பர் வளர்ப்பு மற்றும் மூல இறப்பர் உற்பத்தி வர்த்தகத்திற்கான ஊதிய சபை என்ற தலைப்பின் கீழ் அதன் தலைவர் எம். கே.கே.எஸ்.ஜயசுந்தரவினால் கையொப்பமிட்டு

தொடர்ச்சி P2

# இளவாலையில் மூன்று படகுகளுக்கு தீ வைப்பு

யாழ்ப்பாணம் - இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேந்தான் குளம் பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் பாரிய வன்முறைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

தொடர்ச்சி P2



# வெள்ளியுடன் தவணை நிறைவு

அரச மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் இரண்டாம் தவணை 2024 ஓகஸ்ட் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகிறது என அறிவித்த கல்வி அமைச்சு, 2024ஆம் ஆண்டிற்கான மூன்றாம் தவணையின் முதல் கட்டம் 2024 ஆகஸ்ட் 26ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமென தெரிவித்துள்ளது.




# நாமலுக்கு கோட்டா ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது ஆதரவை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நாமல் ராஜபக்ஷ, வேட்பு மனுவில் கையொப்பமிடும் நிகழ்வு, கொழும்பு விஜேராமவில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில், புதன்கிழமை (14) இடம்பெற்றது. நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

எனினும், ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, சசீந்திர ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்கவில்லை.



PAGE 1 தொடர்ச்சிகள்

## ஜனாதிபதியை தெரிவு செய்ய

# “வாய்ப்பு கிட்டியது”



செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டில் எந்த வகையிலும் வன்முறைகளுக்கும் இடமளிக்கக் கூடாது என வலியுறுத்திய ஜனாதிபதி, அது தொடர்பில் அனைவரும் பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர விசேட நடவடிக்கை மையத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொலிஸ் விசேட அதிரடிப்படையினால் கௌரவமாக வரவேற்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

”போதைப்பொருள் ஒழிப்புக்காக தற்போதுள்ள அனைத்து பொலிஸ், இராணுவ மற்றும் சிவில் நிறுவனங்களை ஒன்றிணைத்து போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் தனியொரு நிறுவனமாக உருவாக்கி, அதற்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படும்.

பாதாள உலகக் குழுகளுக்கோ அல்லது போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கோ நாட்டை அழிக்க இடமளிக்க முடியாது என வலியுறுத்திய ஜனாதிபதி, இலங்கையில் பாதாள உலக செயற்பாடுகளுக்கு எதிராக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டு மக்களை சட்டம் ஒழுங்கின் கீழ் வாழ அனுமதிப்பது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதனைச் சட்டத்தில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, “நாட்டு மக்களை சட்டம் ஒழுங்கின் கீழ் வாழ இடமளிப்பது அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதாகும் என்தைக் கூற வேண்டும். அதை சட்டத்தில் சேர்க்கவும் நாம் எதிர்பார்க்கிறோம்.

அடுத்த மாதத்தில், உங்களுக்கு இன்னொரு பாரிய பணியொன்று உள்ளது. ஜனாதிபதி தேர்தல் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, இத்தேர்தலை சட்டரீதியாக நடத்த வாய்ப்பளிப்பது பொலிஸ் திணைக்களத்தின் கடமையாகும். ஜனாதிபதி என்ற வகையில், எனதும் தேர்தல் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் கடமையும் ஆகும்.

அது மாத்திரமன்றி, தேர்தலுக்குப் பின்னரும் வன்முறைச் செயல்கள் நடப்பதற்கு இடமளிக்க முடியாது. நாம் அவற்றை நிறுத்த வேண்டும்.

இந்தத் தேர்தலுக்குப் பிறகு எந்த வகையிலும் வன்முறைகள் நடைபெறக் கூடாது. அது குறித்து நாம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணப்பட்டதாலேயே இன்று இந்தத் தேர்தலை நடத்த முடிந்துள்ளது. நமது அரசியலமைப்பு பாதுகாக்கப்பட்டுள்ளதால், நாம் அரசியலமைப்பின் பிரகாரமே புதிய அரசாங்கத்தை நிறுவுகிறோம்.

1931 ஆம் ஆண்டு முதல் இலங்கை மாத்திரமே சர்வசன வாக்குரிமை மற்றும் ஜனநாயகத்தைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

மனித உரிமை மீறல் உட்பட வேறு குற்றச்சாட்டுகளும் உள்ளன. ஆனால் இலங்கை மாத்திரமே இந்த ஜனநாயக முறையைத் தொடர்கிறது. இந்த பொறிமுறையை நாம் பாதுகாக்க வேண்டும்.

அதை ஒருபோதும் மீற இடமளிக்கக் கூடாது. அரசியல் கட்சிகளுக்கு இடையே எவ்வளவு பிரச்சினைகள் இருந்தாலும் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு வெற்றி தோல்வியை ஏற்று, வெற்றிபெற்றவரிடம் ஆட்சி கைமாற்றப்படுகிறது.

இந்த சூழ்நிலையால் தான் இது சாத்தியமாகின்றது.

ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டின் அரசாங்கம் கவிழும் நிலை காணப்பட்டது. ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை ஆகியவற்றை ஆக்கிரமித்து, பிரதமரின் தனிப்பட்ட இல்லத்திற்கு தீ வைத்து, பிரதமர் அலுவலகத்தையும் ஆக்கிரமித்து, பாராளுமன்றத்தைக் கைப்பற்றவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முயன்றனர். ஆனால் எமது இராணுவம் உட்பட சட்டத்தைப் பாதுகாக்கும் அனைவரும் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் அன்றைய தினம் பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்க முடிந்தது.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், வங்குரோத்து நிலையிலிருந்து காப்பாற்றவும் நான் அரசாங்கத்தைப் பொறுப்பேற்று தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

அதனால் இன்று நாட்டில் தேர்தலை நடத்த முடிந்துள்ளது. அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும். ஆனால் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் என்ன நடந்திருக்கும்.

அன்று நாம் எடுத்த நடவடிக்கைகளால்தான் இன்று இந்தத் தேர்தலை நடத்த முடிந்துள்ளது. இன்று பங்களாதேஷ் அரசாங்கம் வீழ்த்தப்பட்டுள்ளது. ஆட்சியைப் பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை. எம்.பிக்கள் கொல்லப்படுகின்றனர்.

பாதுகாப்பு செயலாளர், பிரதம நீதியரசர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோரை நாட்டை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டல்கள் தீ வைத்து அழிக்கப்பட்டுள்ளன. அந்த நாட்டில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை.

ஆனால், எமது நாட்டின் பாதுகாப்புப் படையினர் என்ற வகையில் நீங்கள் எடுத்த நடவடிக்கைகளால் நாங்கள் அந்த நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டோம். தற்போது செப்டெம்பர் 21ஆம் திகதி இந்நாட்டு மக்கள் தாங்கள் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை எல்லா நேரங்களிலும் நாங்கள் பாதுகாத்தோம். எனது நண்பர் முஹம்மது யூனுஸ் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பங்களாதேஷில் சட்டம் ஒழுங்கு விரைவில் நிலைநாட்டப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். அதை ஒருபோதும் விட்டுவிடக் கூடாது.

இந்த நாட்டின் அடிப்படை உரிமை ஜனநாயகம். அதேபோன்று அரசாங்கத்தின் இருப்புமாகும். சட்டரீதியான அரசாங்கம் ஒன்று இருக்கின்றது என்றால், அந்த அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும். நான் அதை 1970இல் கற்றுக்கொண்டேன். ஐக்கிய தேசியக் கட்சி அன்று எதிர்க்கட்சியில் செயற்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின் போது எதிர்க்கட்சித் தலைவராக ஜே.ஆர் ஜயவர்தன , “எங்களுக்கு இந்த அரசாங்கம் பிடிக்கவில்லை. இந்த அரசைத் தூக்கி எறிய வேண்டும். ஆனால் நாம் அதை ஜனநாயகக் கட்டமைப்பில் செய்ய வேண்டும்” அதேபோன்று, “இது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல்” எனவே பண்டாரநாயக்காவின் அரசாங்கத்திற்கு நான் பூரண ஆதரவை வழங்குகின்றேன். இது எனக்கு விருப்பமான அரசாங்கமாக இல்லாவிட்டாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம்” என்று அவர் கூறினார். அன்றிலிருந்து இன்று வரை எங்களிடம் அந்த கட்டமைப்பு உள்ளது.

1989 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் அனுருத்த ரத்வத்த ஆகியோர் ஜனாதிபதி பிரேமதாசவைச் சந்தித்து “எங்களுடைய முழு ஆதரவையும் உங்களுக்கு வழங்குகிறோம்” என்று அறிவித்தனர். அதுதான் நமது வரலாறு.

நீங்கள் 2022 ஜூலை மாதம் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியதினால், 2024 செப்டெம்பர் 21ஆம் திகதி, ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க இந்த நாட்டு மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதற்காக உங்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்” என்று ஜனாதிபதி தெரிவித்தார்.



## ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக

# மனுத்தாக்கல்

பொலிஸ் திணைக்களத்திற்குப் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சட்ட மா அதிபர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபராக கடமையாற்ற தேசபந்து தென்னக்கோனுக்கு உயர்நீதிமன்றத்தினால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும், தான் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கியுள்ளமையினால், பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாது என ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தமையையும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# இளவாலையில் மூன்று படகுகளுக்கு தீ வைப்பு



குறித்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (13) இரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் ஏற்பட்ட மோதலின் போது, சேந்தான் குளம் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 படகுகளுக்கு தீ மூட்டப்பட்டுள்ள நிலையில் சில வாடிகளும் எரிந்து நாசமாகியுள்ளதாகத் தெரியவருகிறது. இதனையடுத்து, அப்பகுதி மக்களால் தீ கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 30 பேரடங்கிய அணி ஜனாதிபதிக்கு ஆதரவு



பொதுஜன ஐக்கிய பெரமுன என்பது சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பரந்த கூட்டணி எனவும், அந்த கூட்டணியானது தலைமைத்துவ சபையினால் கட்டுப்படுத்தப்படுவதாகவும் அனுர பிரியதர்ஷன யாப்பா குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், இடதுசாரி அரசியல் கட்சிகள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையிலான அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஐக்கிய முன்னணி எனும் புதிய கூட்டணியை ஆரம்பித்துள்ளது.

பத்தரமுல்லை வாட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் புதன்கிழமை (14) இடம்பெற்ற இந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# ரூ.1,700க்கான வர்த்தமானி தமிழில் வெளியாகவில்லை



இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.


இதில், இறப்பர், தேயிலைத் தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை வேதனமாக 1,350 ரூபாவும், உற்பத்தி அடிப்படையிலான ஊக்குவிப்பு கொடுப்பனவாக 350 ரூபாவுமாக 1,700 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் மட்டுமே வெளியாகியுள்ளது. தமிழ் மொழியிலான வர்த்தமானி அரசாங்க அச்சக திணைக்களத்தின் இணையத்தளத்தில் இன்னும் (புதன்கிழமை (14) இரவு 7.45 மணி வரையிலும்) தரவேற்றப்படவில்லை.

குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏதேனும் ஆட்சேபனைகள் காணப்படுமாயின் அதற்கான காரணங்களுடன் எதிர்வரும் 28ஆம் திகதி மதியம் 12 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஓரளவுக்குத்தான் பரீட்சியம் உள்ளது. தமிழ் மொழியில் இருக்குமாயின் அதனை முழுமையாக விளங்கிக்கொள்ள முடியும் என்பதே தொழிலாளர்களின் கருத்தாகும்.

# விபத்தில் 2 வயது சிறுமி மரணம்



தென் அதிவேக நெடுஞ்சாலையில் எல்பிட்டிக்கு அருகில், புதன்கிழமை(14) காலை இடம்பெற்ற விபத்தில் 2 வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

மத்தலயில் இருந்து கொட்டாவ நோக்கிப் பயணித்த வாகனத்தின் டயர் வெடித்ததால் நெடுஞ்சாலையின் நடுவில் உள்ள பாதுகாப்பு வேலியில் அந்த வாகனம் மோதிய விபத்துக்கு உள்ளானது.

அந்த வாகனத்தில் பயணித்த 3 குழந்தைகள் உட்பட 12 பேர் விபத்தில் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் எல்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், கதிர்காமத்தைச் சேர்ந்த 2 வயதான சிறுமி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சமத்துவக் கட்சி இருவரையும் சந்தித்தது

தமிழ்ச்செல்வன்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோருக்கும் சமத்துவக் கட்சிக்கும் இடையில் தனித்தனியாகச் சந்திப்புகள் நடந்துள்ளன.

கொழும்பில் இடம்பெற்ற இச்சந்திப்புகளில் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார், கட்சியின் தவிசாளர் சு.மனோகரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இச்சந்திப்பு தொடர்பில் சமத்துவக் கட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்தும் இன ரீதியாகப் பல வழிகளிலும் ஒடுக்கப்படுகின்றனர். இதற்குத் தீர்வு காண முடியாதிருப்பது நாட்டின் தோல்வியே என்றும் அதிகாரத்தில் இருப்போரும் அதிகாரத்துக்கு வெளியே இருந்து அரசியல் செய்வோரும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். இன ஒடுக்குமுறை தொடர்வதால், பிரச்சினைகளும் பாதுகாப்பற்ற நிலையும் தொடருகின்றன.

யுத்தம் முடிந்த பிறகு தமிழ் பேசும் மக்கள் நடத்துகின்ற போராட்டங்களே இதற்குச் சாட்சி. இனியும் கால நீட்டிப்பு செய்யாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

அதற்கான கால வரையறையும் அட்டவணையும் அவசியமாகும். இலங்கை பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்ற வகையில் பன்மைத்துவத்துக்கும் சுயாதீனத்திற்கும் உரியவாறு அரசியல் அமைப்பு உருவாக்கப்படுவது அவசியமாகும் என வலியுறுத்தியுள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நாட்டை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவது கடினம். நாடு பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கும்





பிற சக்திகளின் பிடியிலிருந்து விடுபடுவதற்குத் தீர்வு அவசியமாகும் என வலியுறுத்தப்பட்டது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சமத்துவக் கட்சியின் நிலைப்பாடு, மக்களின் கருத்தறிந்து வேட்பாளர்களின் நிலைப்பாட்டை அவதானித்தும் பொருத்தமான முறையில் விரைவில் எட்டப்படும்” ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இருவரிடத்திலும் சமத்துவக் கட்சி தன்னுடைய நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.




# தொழிலாளர் நிலைமையை தெளிவுபடுத்தும் வீதி நாடகம்

செ.தி.பெருமாள்

தலவாக்கலை பாடசாலை, நடைமுறை கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமையை பொது மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் வீதி நாடகம் ஒன்று ஹட்டனில் புதன்கிழமை(14) நடத்தப்பட்டது.

இது தொடர்பில் பாடசாலையின் அதிபர் டொமினிக் சந்தனம் தெரிவிக்கையில்,

“தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்து சுமார் 200 வருடங்கள் கடந்தும் அவர்களின் சில குடும்பங்கள் பட்டிக்குள் அடைக்கப்பட்டுள்ளனர். தற்போது நிலவும் பொருளாதார பிரச்சினையால் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றதுடன், பெருந்தோட்ட பகுதி மாணவர்கள் பலரும் தமது குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் கல்வியை இடையில் நிறுத்திவிட்டு தோட்டங்களை விட்டு வெளியே சென்றுள்ளார்கள் .

இந்நிலைமையை மக்களுக்கு உணர்த்தும் வகையில் இந்த வீதி நாடகங்கள் அரங்கேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்” என தெரிவித்துள்ளார்.







# நியமனம்

ஆ.ரமேஸ்



நுவரெலியா, தின சந்தை கட்டிடம் இலக்கம் 15 ஏ முகவரியில் வசிக்கும் கருப்பையா கோபு, அகில இலங்கை சமாதான நீதவானாக நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பிரபுதிகா லங்காங்கனி முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (13) சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கந்தப்பளை-மெதடிஸ்ட் கல்லூரியின் பழைய மாணவரான இவர், நுவரெலியா ஹோட்டபீல்ட் டிரைவ் ஆங்கில பாடசாலையின் ஆங்கில பட்டதாரி மாணவர், கந்தப்பளையில் இயங்கிய கோபு கல்வி நிறுவன உரிமையாளரான இவர் சமூக சேவையாளர். இவர், கந்தப்பளை கொங்கோடியா தோட்டத்தை சேர்ந்த கருப்பையா, காந்திமதி தம்பதிகளின் புதல்வராவார்.

# வீடுகளுக்குள் நுழைந்தவரை தெரிவித்தால் சன்மானம்

நிதர்ஷன் வினோத்



யாழ். நல்லூர், மானிப்பாய், கோப்பாய், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் நுழைந்து தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த நபர் தொடர்பான சி.சி.ரி.வி காணொளிகளை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

துவிச்சக்கர வண்டியில் இரவு மற்றும் பகல் நேரங்களில் வந்து முகமூடிகள், கையுறைகள் அணிந்து அடையாளம் காண முடியாதவாறு வீடுகளுக்குள் நுழைந்து தொடர் திருட்டுக்கள் மேற்கொள்ளப்படுவதாக யாழ். பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், சில தினங்களுக்கு முன்னர் வீடொன்றுக்குள் நுழைந்து திருடப்பட்ட காணொளிகளில் சந்தேக நபரின் முகமூடி கழன்றிருப்பதை அவதானிக்க கூடியதாக இருந்துள்ளது.

இதனால் குறித்த நபர் தொடர்பில் தகவல் தெரிந்தால் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு கேட்டுள்ள பொலிஸார் இவ்வாறு தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்

முல்லைத்தீவு- மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட பாண்டியன் குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி பெருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை (23) நடைபெறவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை ( 19 ) கர்மாரம்பமும், 20ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை என்னைக்காப்பு சாத்தும் வைபவமும் அதனைத் தொடர்ந்து மகா கும்பாபிஷேகப் பெருவிழாவும் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீர்த்தேக்கத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

கௌசல்யா, துவாரகஷான்

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் இருந்து புதன்கிழமை (14) இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை மேற்பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 24 வயதுடைய டி.மதுசன் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நீர்த்தேக்கத்தில் சடலம் ஒன்று மிதப்பதை அவதானித்த பொதுமக்கள், பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய பொலிஸார், பொதுமக்களின் உதவியுடன் சடலத்தை மீட்டெடுத்துள்ளனர்.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# சஜித்துக்கு டில்ஷான் ஆதரவு

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் திலகரத்ன டில்ஷான், ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை சந்தித்த அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

# கடைக்குள் சென்ற கார்

ரஞ்சித் ராஜபக்ஷ



நுவரெலியாவில் இருந்து கொழும்பு நோக்கி அதி வேகமாக பயணித்த கார் ஒன்று, ஹட்டன்-கொட்டகலை நகரில் உள்ள கடை ஒன்றின் மீது மோதியதில், காரின் சாரதி படுகாயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் புதன்கிழமை (14) இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கார் மற்றும் கடைக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், காரின் சாரதிக்கு ஏற்றப்பட்ட தூக்க கலக்கமே விபத்துக்கு காரணம் எனவும் தெரியவந்துள்ளது.

மேலும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள- பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பியூலன்ஸ் மோதி வயோதிபர் படுகாயம்

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நாவற்குடா பகுதியில் புதன்கிழமை(14) அம்பியூலன்ஸ் வண்டி மோதியதில், வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து மட்டு. போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு சொந்தமான அம்பியூலன்ஸ் வண்டியில் நோயாளி ஒருவரை ஏற்றிக்கொண்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பயணித்துக் கொண்டிருந்த போது, திடீரென துவிச்சக்கர வண்டியில் வந்த வயோதிபர் மீது மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

அம்பியூலன்ஸ் சாரதி காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.



# வர்த்தக அலையில் சிக்கியுள்ள இலவச சுகாதாரத்தை மீட்கவும்

சுகாதார அமைச்சில் இருந்த சில சுகாதார அமைச்சர்கள், மருந்திற்குப் பதிலாக, தரம் குறைந்த மருந்துகளை உற்பத்தி செய்வதற்கும் தயாரிப்பதற்கும் தண்ணீரையே பயன்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், அரசாங்க வைத்தியசாலைகளில் இன்னும் 52 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன ஒப்புக்கொண்டுள்ளார்.

நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு குறித்து பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்கு ஆளாகியபோது, பொருளாதார மந்தநிலையால் நாடு சரிந்ததால், நம் நாட்டு வைத்தியசாலைகளில் படிப்படியாகக் குறைந்து வந்த மருந்து இருப்பு, அதன்பின் காணாமல் போனது. நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்ததோ, மருத்துவமனைகளில் மருந்து இல்லாமல் போனதோ மக்களின் தவறல்ல. தந்திரமான மற்றும் தந்திரமான அரசியல்வாதிகளே பொறுப்பாகும்.

சில வைத்தியசாலைகளில் காயத்தைத் தைக்க அறுவை சிகிச்சை ஊசி கூட இல்லை. மாரடைப்பு, புற்றுநோய், சிறுநீரகம் போன்ற நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் பல அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் பல நோயாளிகள் உயிரிழந்துள்ளனர். இந்நிலையிலேயே மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு இன்னும் தீரவில்லை என்பதை அமைச்சரின் பேச்சு உணர்த்துகிறது.

உண்மையில், இப்போதெல்லாம், அரசு வைத்தியசாலைகளுக்கு நோயாளி சென்றவுடன், மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்தை வெளி மருந்தகத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி நோயாளி பெறவேண்டும். எனவே, நாட்டில் இலவச சுகாதார சேவை இயங்குகிறது என்ற கதையை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

மருந்துகள் மட்டுமின்றி, முன்பு சொன்ன அறுவை சிகிச்சை கருவிகளும், கண் மற்றும் பல் மருத்துவ பயன்பாடுகளும் இப்போது அரசு மருத்துவமனைகளில் குறைவு. இதன் காரணமாக இலவச சுகாதார சேவையானது வர்த்தக அலையின் பிடியில் சிக்கியுள்ளதுடன், நாட்டு அப்பாவி மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேறு பல நாடுகளில் இல்லாவிட்டாலும், இலங்கையின் இலவசக் கல்வியும் இலவச சுகாதாரமும் நாட்டிற்குப் பெருமை சேர்ப்பவை. நாட்டுக்கே பெருமை. மேலும், வறுமையில் இருந்து இன்னும் மீள முடியாத நம் நாட்டிற்கு இது பெரும் சேவையாகும். இது பணத்தில் அளவிடக்கூடிய ஒன்றல்ல.

எனவே, நாட்டை யார் ஆட்சி செய்தாலும் தோட்ட, கிராமிய உள்ளிட்ட வைத்தியசாலைகளின் அமைப்பை மீள நிறுவும் பணிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இந்த நாட்டு மக்கள் பொதுவாக எந்தவொரு சேவையும் அரசாங்கத்திடமிருந்து இலவசம் என்று கூறினால் அது சுகாதார சேவைதான். அந்தச் சேவை நாளுக்கு நாள் மேம்பட்டு நாட்டு மக்களுக்கு மிகச் சிறந்த சுகாதாரச் சேவையை வழங்கினால், அத்தகைய தகுதியை வேறு எதனாலும் பெற முடியாது.

மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறை உள்ளிட்ட சேவைகளின் பற்றாக்குறையை ஈடுசெய்வது நல்லது.

அரசாங்க வைத்தியசாலைக்குச் செல்வதை விடவும் தனியார் வைத்தியசாலைகளில் இலகுவாகச் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என பலரும் அறிவுரை கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். எனினும், கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டாலும் முறையான சேவையை அரச வைத்தியசாலைகள் வழங்குகின்றன. பற்றாக்குறையை நிவர்த்தி செய்தால், சேவைகள் வேகமாக நடக்கும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

இருண்ட மனதைப் போக்கினால் தான் இன்பம் சூழும். இதற்கு என்ன வழி?

மக்கள் சேவைக்குள் புகுந்துவிடுக. உண்மையான மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதை உணர்வீர்கள். இதயத்தில் நிம்மதி ஒளிவிடும். தன்னை மறந்து, புது உலகில்த் தவழ, இந்த வழியையே, புத்திசாலிகள் விருப்பத்துடன் செய்கின்றார்கள்.

உங்கள் உடல் வலுவுக்கு ஏற்ப, விரும்பும் நற்செயலுடன் இணைக. சிறிது நேரமாவது செய்யும் நற்காரியங்கள், விஸ்வரூபமாக மாறும் செய் கருமங்களும் பெருகும்.

உங்களை நோக்குபவர்கள், உங்களுடன் தொடர்ந்து பயணிப்பார்கள். செய்து பாருங்கள்! அதன் புதுமையும் அற்புதங்களும் நன்கு புரியும்.

எங்களால் யாராவது, நல்ல பயனைக் கண்டால், அதைவிடத் திருப்தி ஏது? சமானிய மனிதன், மகா மனிதனாக மாறியது, இதுபோல என்பதை அறிவீர்களா?

வாழும் வழியைச் சுலபமாக்குங்கள். நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் வழியைத் தேர்ந்தெடுங்கள். நல்லதைச் செய்ய ஏது சுணக்கம்? உடன் எழுக.

– பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# “அனைவருக்கும் ஒரே நீதி வேண்டும்”

முருகானந்தம் தவம்

தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை பிரதிநிதிகளை உள்ளடக்கிய தமிழ் பொதுக்கட்டமைப்பினரால் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் கிழக்கு மாகாணத்தின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளருமான பா.அரியநேத்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளமை தமிழ் பொது வேட்பாளரை கடுமையாக எதிர்க்கும் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணிக்கு கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், இவர்களின் அழுத்தம் காரணமாக தமிழரசுக் கட்சியினால் அரியநேத்திரனிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதுடன், தமிழரசுக் கட்சியின் கூட்டங்களில் பங்கேற்கவும் தடை விதிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அண்மையில் நடத்தப்பட்டதன் பின்னர் ஊடகங்களைச் சந்தித்த தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தரான எம்.ஏ.சுமந்திரன் “தமிழரசுக் கட்சியுடன் கலந்தாலோசிக்காது தமிழ் பொது வேட்பாளராக நிற்க இணங்கிய கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரான அரியநேத்திரனிடம் விளக்கம் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டு ஒரு வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதுவரை கட்சி நிகழ்வுகள் எவற்றிலும் அவர் பங்கேற்க அழைப்பு விடுப்பதில்லை என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது” என்று அறிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழரசுக் கட்சியில் ஸ்ரீதரன் அணி ஆதரவாகவும் சுமந்திரன் அணி எதிராகவும் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா இருதலைக்கொள்ளி எறும்பாகவும் உள்ள நிலையில், அதே கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தரான பா.அரியநேத்திரன் கட்சியின் அனுமதியின்றி, கட்சியுடன் கலந்தாலோசிக்காது தமிழ் பொதுக் கட்டமைப்பின் தமிழ் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தல் களத்தில் களமிறங்க முடிவு செய்தது தவறு. அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. அதனால் அவரிடம் விளக்கம் கேட்டுள்ளதும் தமிழரசுக் கட்சி நிகழ்வுகளில், கூட்டங்களில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதும் நியாயமானதே.

ஒரு கட்சிக்கு, அதன் தலைமைக்கு கட்டுப்படாதவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியம். அது கட்சித் தலைமையின் கடப்பாடும் கூட. ஆனால், ஒரு கட்சி, அதன் தலைமை தமது உறுப்பினர்கள் அனைவரையும் ஒரே தராசில் வைத்தே பார்க்க வேண்டும். தவறுகள் செய்வோருக்கு, கட்சிக் கட்டுப்பாட்டை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் தராதரம் பார்க்கக்கூடாது. அடி பணிந்து நடக்கக் கூடாது. ஆனால், தமிழரசுக் கட்சியின் தலைமையிடம் அல்லது கட்சியிடம் இந்த “அனைவருக்கும் ஒரே நீதி” கொள்கை இல்லாததுதான் தலைமையின், கட்சியின் நேர்மைத் தன்மைக்கு, ஒழுக்கத்திற்கு, கட்சி விதிக்கு முரணாகவுள்ளது.

“தமிழரசுக் கட்சியுடன் கலந்தாலோசிக்காது தமிழ் பொது வேட்பாளராக நிற்க இணங்கிய தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரான அரியநேத்திரனிடம் விளக்கம் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டு ஒரு வாரகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதுவரை கட்சி நிகழ்வுகள் எவற்றிலும் அவர் பங்கேற்க அழைப்பு விடுப்பதில்லை என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது” என்று அறிவித்த தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான எம்.ஏ.சுமந்திரனே தமிழரசுக் கட்சித் தலைமையின் பக்கச்சார்பான அல்லது ஒரு தலைப்பட்சமான தீர்மானங்கள், தண்டனைகள், விளக்கம் கோரல்கள், தடை விதிப்புகளுக்குச் சிறந்த உதாரணமாக உள்ளார்.

> **வடக்கில் இடம்பெற்றது தமிழினப் படுகொலை என வடக்கு மாகாண சபையில் அப்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிறைவேற்றிய தீர்மானம் தவறு, விடுதலைப் புலிகளையோ அவர்களின் கொள்கைகளையோ நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என சுமந்திரன் எம்.பி. பகிரங்கமாகவே கூறியிருந்தார்**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளைச் சந்தித்தபோது, அதில், தமிழரசுக் கட்சி பங்கேற்றபோதும் அதில் பங்கேற்காது சுமந்திரன் புறக்கணித்தார். அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தினருடனான சந்திப்பு தொடர்பில் கலந்துரையாட வருமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, ஜே .வி. பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் அப்போது தெரிவாகியிருந்த எஸ்.ஸ்ரீதரன் ஆகியோருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், இந்த ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ அழைப்பை மூன்று கட்சிகளின் தலைவர்களும் புறக்கணித்த நிலையில், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சுமந்திரன் மட்டும் கட்சித்தலைமையின் முடிவுக்குக் கட்டுப்படாது அதில் பங்கேற்றார். தனக்கு ஜனாதிபதி தனிப்பட்ட அழைப்பை விடுத்ததாக ஒரு கதையையும் அவர் தனது விசுவாச ஊடகங்கள் மூலம் கசிய விட்டிருந்தார். தனது கட்சி ஜனாதிபதியின் அழைப்பைப் புறக்கணித்த நிலையில், அக்கட்சியைச் சேர்ந்த சுமந்திரனால் தனிப்பட்ட அழைப்பு என்ற ரீதியில் எவ்வாறு அதில் பங்கேற்க முடியும்? அவ்வாறானால் சுமந்திரன் கட்சிக்கு, அதன் கொள்கைக்குக் கட்டுப்பட்டவர் இல்லையா? அப்போது அவருக்கு எதிராக ஏன் கட்சித் தலைமையினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

தன்னை 2010ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் ஊடாக ஒரு எம்.பியாக பாராளுமன்றம் அழைத்து வந்து அரசியல் முகவரி கொடுத்து தனக்கு அடுத்த நிலையில், வைத்து வளர்த்தவரான அப்போதைய இலங்கை தமிழரசுக் கட்சியினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தலைவரான இரா.சம்பந்தனையே எம்.பி. பதவியிலிருந்து உடனடியாக விலக வேண்டும். சம்பந்தன் ஒரு செயற்பட முடியாத தலைவர். அவரால் திருகோணமலை மாவட்டத்திற்கோ மக்களுக்கு எந்த பிரயோசனமும் இல்லை என ஊடகங்கள் மூலம் பகிரங்கமாக அறிவித்தவர் சுமந்திரன்.அப்போது கட்சித்தலைமைக்கு எதிராகச் செயற்பட்டமைக்காக ஏன் கட்சித் தலைமையினால் சுமந்திரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

இது மட்டுமல்ல, இலங்கை தமிழரசுக் கட்சிக்கும், அதன் கொள்கைக்கும், தமிழ் மக்களின் நிலைப்பட்டிற்கும் விடுதலைப்புலிகளின் உரிமைப் போராட்டத்திற்கும் எதிராகச் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள், செயற்பாடுகள் ஒன்று இரண்டல்ல. வடக்கு, கிழக்கில் தமிழினப் படுகொலை இடம்பெறவில்லை. போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை இராணுவத்தைச் சர்வதேசம் விசாரணை செய்வதென்றால் விடுதலைப் புலிகளையும் விசாரணை செய்ய வேண்டும். வடக்கில் இடம்பெற்றது தமிழினப் படுகொலை என வடக்கு மாகாண சபையில் அப்போதைய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிறைவேற்றிய தீர்மானம் தவறு, விடுதலைப் புலிகளையோ அவர்களின் கொள்கைகளையோ நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என சுமந்திரன் எம்.பி. பகிரங்கமாகவே கூறியிருந்தார். கட்சியின் கொள்கைக்கு முரணாகக் கருத்து வெளியிட்டமைக்காக ஏன் கட்சித் தலைமையினால் தலைமையினால் சுமந்திரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

அதுமட்டுமல்ல, அரசியல் தலைவர்களுடன், இந்தியா, சீனா உள்ளிட்ட வெளிநாடுகளின் தூதுவர்களுடன் சுமந்திரன் தனிப்பட்ட சந்திப்புக்களை நடத்துகின்றார்.

> **கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக உறுப்பினர் எவரும் செயற்படும்போது, அதற்குரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் விளைவுகளை அந்த உறுப்பினர் எதிர் கொள்ள வேண்டுமே தவிர, அவ்வாறு செய்யாது, கட்சிக்கும் அதற்கும் தொடர்பில்லை என மட்டும் கூறுவதோ அல்லது கண்டனமும் கவலையும் தெரிவிப்பதோ வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக மட்டுமே இருக்க முடியும்**

கட்சித் தலைமையின் கருத்துக்களுக்குப் பதிலாக அவர் அரசியல் தலைவர்கள், தூதுவர்களிடம் தனது கருத்தையே முன் வைக்கின்றார். இந்தியத் தூதுவரை ஒருதடவை தமிழ் கட்சிகள் சந்தித்தபோது தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தமிழரசுக் கட்சி எந்தவொரு முடிவையும் எடுத்திருக்காத நிலையில் சுமந்திரன் இந்தியத் தூதுவரிடம் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிரான கருத்துக்களையே முன்வைத்திருந்தார். இது தொடர்பில் ஏன் கட்சித்தலைமை அவரிடம் விளக்கம் கேட்கவில்லை?

சுமந்திரனின் இவ்வாறான கட்சிக்கோ, தலைமைக்கோ கட்டுப்படாத செயற்பாடுகளைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்கள், “அது தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு அல்ல, அது அவரது தனிப்பட்ட நிலைப்பாடு” என கூறித் தப்பிக்கின்றனர். கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக உறுப்பினர் எவரும் செயற்படும்போது, அதற்குரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன் விளைவுகளை அந்த உறுப்பினர் எதிர் கொள்ள வேண்டுமே தவிர, அவ்வாறு செய்யாது, கட்சிக்கும் அதற்கும் தொடர்பில்லை என மட்டும் கூறுவதோ அல்லது கண்டனமும் கவலையும் தெரிவிப்பதோ வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக மட்டுமே இருக்க முடியும். அத்துடன், கட்சிக்குள் அடாவடியாகச் செயற்படுவோரிடம் அடங்கிப்போவதும் கட்சிக்கு அடங்கி நடப்போரிடம் பொங்கி எழுவதும் கட்சியின் தலைமைக்கு அழகுமல்ல, தகுதியுமல்ல.

## கடிதங்கள்

### தீர்வு வேண்டும்

முல்லைத்தீவு-வட்டுவாகல் பாலமானது பல ஆண்டுகளாக சேதமடைந்துள்ளதால், அதனைப் புனரமைத்துத் தர வேண்டுமெனப் அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாலம் நிரந்தரமான திருத்த வேலைகள் செய்யப்படாது, தற்காலிகமாகவே புனரமைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும், இப்பாலத்தின் வழியே நாளாந்தம் அதிகமான போக்குவரத்து நடைபெறுவதனால் பயணிகள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் பாரிய பிரச்சினைகளைச் சந்தித்து வருக்னறனர்.

அத்துடன், தெரு விளக்கின்மையால் அப்பாலத்தின் ஊடாக இரவு நேரப் பயணங்களிலும் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமத்தினை எதிர் கொண்டுள்ளனர்.

இவ்விடயங்களை கவனத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் வட்டுவாகல் பாலத்திற்குரிய நிரந்தரமான தீர்வினை வழங்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- சி.கதீசனா



ல.மயூரன்
BA.MA.Mphil[R]



# பூக்களின் வீழ்ச்சி பாதகமாக அமையும்

(புதன்கிழமை தொடர்ச்சி...)

இந்த அதிகரிப்பு தீவிர மழைப்பொழிவுக்கு வழிவகுத்து விடும். இச்செயற்பாடு அதிகமான மழைவீழ்ச்சியை குறுகிய காலத்தில் பெற்றுத்தரும்.

வளிமண்டல வெப்பநிலையானது 1976ம் ஆண்டுகளை அடுத்த காலப்பகுதிகளைத் தொடர்ந்து அதிகரிக்கத் தொடங்கி விட்டன என்று IPPC கூறுகின்றது கி.பி. 1950 காலப்பகுதியை அடுத்து கடல் வெப்பநிலையானது 0.5°C - 0.6°C வரை அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணத்தினால் 1970இல் காலப்பகுதியினை அடுத்து கடல் மட்ட வளி மண்டலத்தின் நீராவி அல்லது ஈரப்பதன் 4 சதவீதம் அதிகரித்துள்ளது.

இச்செயற்பாடு வளிமண்டலத்தின் செயற்பாட்டில் 5-10 சதவீதம் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இம்மாற்றம் அதிகரித்த மழைப்பொழிவையும், புயல்களின் எண்ணிக்கையில் அதிகரித்த தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. நிலப் பரப்பை அதிகமாகக் கொண்ட புவியின் வட அரைக் கோளம் அதிகமான வெப்பத்தையும், வளிமண்டல ஈரப்பதனையும் அதிகமாகக் கொண்டவையாகவும் மாற்றமடைந்து வருகின்றது என IPPC அறிக்கை கூறுகின்றது.

புவியின் சுழற்சிக்கு அமையக் காற்று விசும் திசை தீர்மானிக்கப்படுகின்றது. அதனடிப்படையில், இயங்கு நிலையில் உள்ள காற்று காலநிலை மாற்றத்தால் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது.

வெப்பத்தின் அதிகரிப்பால் விரைவடையும் காற்று, மிக வேகமாக அசையும் தன்மை கொண்டவையாக மாற்றம் பெறும். இவ்வாறான வெப்ப அதிகரிப்பு காற்றின் திசையில் மாற்றத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி, அதன் பருவகால ஒழுங்கையும் பாதிக்கின்றது. இக்காற்று புவியின் மேற்பரப்பு வெப்பநிலையைச் சமப்படுத்துவதில் பாரிய அளவில் செல்வாக்கு செலுத்துகின்றது.

புவியின் மேற்பரப்பு வெப்பநிலையைத் தீர்மானிக்கும் சக்தியாகக் காணப்படும் இக்காற்று புவி மத்திய ரேகையில் இருந்து துருவங்களை நோக்கி சூடான காற்றையும், துருவங்களிலிருந்து புவி மத்திய ரேகையை நோக்கி குளிரான காற்றையும் பரிமாற்றம் செய்கின்றது. இச்செயற்பாடு உலகின் வெப்பநிலைப் பரம்பலை சமப்படுத்த, ஒழுங்கு படுத்த உதவி புரிகின்றது எனலாம்.

கண்டங்களின் மேற்பரப்பினுடாகவும் சமுத்திர மேற்பரப்பின் ஊடாகவும் வீசும் இக்காற்றுகள் கடல் நீரோட்ட செயன்முறைக்கு வழிவகுக்கின்றது. இக்கடல் நீரோட்ட செயற்பாடுகள் சமுத்திரப்பரப்பில் வெப்ப சமநிலையை ஏற்படுத்துவதுடன், சமுத்திர உயிரினங்களுக்குச் சாதகமாகவும் அமைகின்றது.

கடலின் மேற்பரப்பில் நிகழும் காற்றுக்களின் அசைவு பிராந்திய காலநிலையில் செல்வாக்கு செலுத்துவதுடன், சுற்றுச்சூழல் அமைப்புகளில் குறிப்பிடத்தக்கத் தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது.

காற்றில் ஏற்படும் மாற்றம் ஆவியாதல், மழைப்பொழிவு என்பனவற்றில் பாரிய அளவிலான மாற்றத்தை ஏற்படுத்தும். வளிமண்டல வெப்பநிலை அதிகரிக்கும் போது அவை பயணம் செய்யும் மேற்பரப்பில் உள்ள வளிமண்டல ஈரப்பதனை ஆவியாக்கத்திற்கு உட்படுத்துகின்றது.

இதன் காரணத்தினால் அதிகரித்த அல்லது சடுதியான மழைப்பொழிவு தோற்றம் பெறுகின்றது. அச்செயற்பாடு வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தும் செயற்பாடாக மாற்றம் அடைகின்றது.

காலநிலை மாற்றம் காரணமாகக் காற்றின் வடிவம் மாற்றம் பெற்று படிவு வீழ்ச்சியின் வடிவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும். சடுதியான மழைவீழ்ச்சி, அதிகரித்த மழைவீழ்ச்சி, தீவிர வானிலை நிகழ்வுகள், அதிகரித்த தாழமுக்கம் மற்றும் புயல் நிகழ்வுகள், காற்றுக்களின் போக்குகளில் மாற்றம் என பல நிலையற்ற வானிலை நிகழ்வுகளுக்குக் காற்று வழிவகுத்துவிடும்.

காற்றின் செயற்பாட்டில் மாற்றம் ஏற்பட்டால் பயிர் வளர்ச்சியிலும் மாற்றம் ஏற்படும். இதனால் தாவர உணவு உற்பத்தித் திறனில் நேரடி மற்றும் மறைமுக விளைவுகள் ஏற்படும். C02 அளவு வளிமண்டலத்தில் அதிகரித்ததன் காரணத்தினால் பலவகையான தாவரங்களின் கருத்தரித்தல் செயல்முறை குறைவடைந்து செல்லும். இச்செயற்பாட்டிற்கு முரணாகச் சிலவகைப் பயிர்களின் ஒளிச்சேர்க்கை செயற்பாடு அதிகரித்துச் செல்லும். குறிப்பாக C3 தாவர வகைகளைக் குறிப்பிடலாம் சாதாரணமாகக் கோதுமை, அரிசி,சோயாபீன்ஸ் ஆகியன.

வளிமண்டலத்தில் C02 அளவு அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், தாவரத்தின் ஒளி செயர்க்கை செயற்பாடு அதிகரிக்கப்பட்டு அவற்றினால் பயிரின் விளைச்சல் அதிகரிக்கப்படும் இச்செயற்பாட்டை C02 Fertilization செயற்பாடு எனப்படும். காற்றின் வெப்பத் தன்மை பயிர்களுக்கு இடையிலான நோய் பரவலைத் துரிதப்படுத்தும். அதேசமயம் ஈரப்பதனான காற்றில் பங்கசுகளின் வளர்ச்சி மிக வேகமாகக் காணப்படும். அவை பயிர்கள் மீது பரவுகின்ற தன்மை அதிகரிக்கும். அதேசமயம் உலர் தன்மையான காற்றிலும் நோய்க் காவிகள் மிகவேகமாக வளர்ச்சியடையும். காற்றின் வேகம் இந்நோய் பரவல் தன்மையை ஊக்குவிப்பதுடன் பரவும் வேகத்தை அதிகரித்துக்கொள்ளும்.

இதனால் பயிர்களுக்கான நோய்த் தாக்கம் என்பது எதிர் காலத்தில் கட்டுப்படுத்த முடியாத வகையிலும், எதிர்கொள்ள முடியாத தன்மையிலும் காணப்படும். உலர் தன்மையான காற்றின் வேகம் அதிகரிக்கும் போது, பயிர்களின் பழங்கள் அதிக சுவை கொண்டவையாகக் காணப்பட்டாலும் பூக்கள் உதிர்ந்து விழும் தன்மை அதிகமாகக் காணப்படும். பூக்களின் வீழ்ச்சி காய்களினதும், கனிகளினதும் உருவாக்கத்திற்குப் பாதகமாக அமையும். இவ்வாறு காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் வேகம் கொண்ட காற்றின் செயற்பாடு விவசாய செயற்பாட்டைப் பாதிப்பிற்கு உள்ளாக்கி மனிதர்களின் உணவுத் தேவையில் மந்தகதியை ஏற்படுத்தும்.

கடல் மட்ட உயர்வு காரணமாக விவசாய நடத்தைகள் பல ஆபத்துகளை எதிர்கொள்ளும். அதிக வெப்பம் காரணமாக நிலத்தின் நீர் இருப்பு குறைவடைந்து செல்லும் பொழுது மண்ணீர் அளவு குறைவடைந்து காணப்படும். அதன் காரணத்தினால் நீர் தொடுகையுறும் சந்தர்ப்பங்களில் மணல் பகுதி மிக வேகமாக அந்நீரைப் பெற்றுக்கொள்ளும்.

மறுபுறம் வெப்பநிலை அதிகரிப்பு பனிக் கவிப்புகளை உருகச் செய்து கடல் மட்ட உயரத்தினை அதிகரிக்கச் செய்யும் அதன் காரணத்தினால் கடல்நீர் கரையோரத்தை அண்டிய பகுதியில் காணப்படும் ஆற்றுக் கழிமுகப் பகுதி, கிணறு மற்றும் நீர்த்தேக்கங்கள் போன்றவற்றில் உட்புகுந்து விடும் அல்லது உள்வாங்கிக் கொள்ளும் இதனால் நன்னீர் வளம் இல்லாமல் உப்புச் செறிவு கொண்ட நீராக உள்நாட்டு நீர்வளம் மாற்றம் பெறும். நிலத்தடி நீரிலும், மேற்பரப்பு நீரிலும் இடம்பெறும் இம்மாற்றம் கரையோர விவசாயிகளுக்கும், கரையோரத்தில் வசிக்கும் மக்களின் நன்னீர் பயன்பாட்டிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

வெப்பத்தினால் நிலத்தடி நீர் மட்டும் குறைவடைந்து செல்ல மறுபுறம் கடல்நீர் உட்புகுவதினால் கரையோரத்தை அண்டிய பகுதியில் காணப்படும் விவசாய நிலங்களுக்கான நன்னீரைப் பெற்றுக் கொள்வது சிரமமாக்கப்படும். கடற்கரைப் பகுதியை அண்மித்த விவசாய நிலப்பகுதி தாழ்வான பகுதியாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், கடல் நீர் உட்புகுதல் அதிகரிக்கும் அதனால் நிரந்தரமாகக் கடல் நீர் தேங்கும் பகுதிகளாக அவை மாற்றம் பெறும். இதனால் விவசாய நிலம் உவர் நிலமாக மாற்றம் பெறும். கரையோரத்தை அண்டிய விவசாய நிலப்பகுதி குறைவடைவதோடு, கரையோர விவசாய நடத்தைகள் உயர்வான நிலப்பகுதிகளை நோக்கி நகர்ச்சியடையத் தொடங்கும். விவசாய நிலத்திற்கான தேவை அதிகரிக்கும் புதிய நிலப்பகுதியை உருவாக்க வேண்டிய தேவை ஏற்படும். அதனால் காடுகள் மிக வேகமாக அழிக்கப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுபவர்களாக நாம் காணப்படுவோம். புதிய நிலங்களைப் பெற்றுக்கொள்வது சிரமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ்விவசாய சமூகம் தமது பொருளாதார நிலையைத் தக்கவைத்துக்கொள்ள வேறு தொழில் நடத்தைகளை நாடவேண்டிய தன்மை உருவாகும். அது பாரம்பரிய விவசாய செயற்பாடுகளில், விவசாயத் தொழிலாளர்களின் உருவாக்கத்தில் தாக்கத்தைச் செலுத்தும்.

கடல் மேற்பரப்பில் உள்ள நீரின் வெப்ப அதிகரிப்பு மற்றும் காற்றின் வேகம் கடல் நீரோட்ட செயன்முறையின் வேகத்தை அதிகரிக்கும். அதன் காரணத்தினால் கடல் அலைகளின் உயர்ச்சியும்,வேகமும் அதிகரித்துக் காணப்படும். இவ்வாறான செயற்பாடு கரையோரப் பகுதியில் உள்ள மணல் பரப்பை மிகவேகமாக தின்னலுக்கு உட்படுத்தும். கடல் நீரின் நீரோட்ட செயற்பாடு கரையோரப் பகுதியை நோக்கியதாக நகரும் பொழுது, தோற்றம் பெறும் அலைகளின் உயரம், எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் பொழுது அவை நீண்ட அலைகளாகவும் பலமான அலைகளாகவும் காணப்படும். அதனால் கரையோர மணல் அகழ்வு மிகத் தீவிரமாக இடம் பெறும்.

அதிக மணலை கடற்கரை பகுதி இழக்கும் பொழுது, அதனை அண்டிய நிலப்பகுதி பள்ளமாக்கப்படும். கரையோர பகுதி விவசாய நிலப் பகுதியாக காணப்படும் சந்தர்ப்பத்தில் அங்கு மேற்கொள்ளப்படும் விவசாய செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படும். குறிப்பாக வளம் நிறைந்த கழிமுக மணல் பகுதியை இழக்க வேண்டிய சூழலைச் சந்திக்க நேரிடும். களப்பு பகுதிகளில் கடல் நீரின் உட்புகுதல் செயற்பாடு அதிகரிக்கும் பொழுது, களப்பு சூழல் பாதிக்கப்படுவதோடு, அங்குள்ள அனைத்து உயிரின நடத்தைகளும் மாற்றத்துக்குள்ளாகும். களப்பு பகுதியினை அண்மித்து காணப்படும் நிலப்பகுதியின் தரைக் கீழ் நீர்ப் பரப்பிலும் உவர்நீரின் தன்மை அதிகரித்துச் செல்லும் . இவ்வாறாகக் காலநிலை, வானிலை நிகழ்வுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் விவசாய செயற்பாடுகளைப் பல வழிகளில் கட்டுப்படுத்துவதுடன், உணவு உற்பத்தியிலும் பாரிய அளவிலான தாக்கத்தைச் செலுத்தும். அதேசமயம், மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதுடன், உலக அளவில் உணவுப் பஞ்சத்தையும் ஏற்படுத்தும் என்பதை யாரும் மறுப்பதற்கு இயலாது.

## காலநிலை மாற்றத்தால் கால்நடை வளர்ப்பு எதிர்நோக்கும் சவால்கள்

வெப்பநிலை மாற்றம் விலங்குகளின் மனநிலையில் நேரடியாக மாற்றத்தை ஏற்படுத்தும் இதனால் விலங்குகளின் பிறப்பு இறப்பு வளர்ச்சி நிலைகள் பாதிக்கப்படும் நிலை அதிகரிக்கும். பாலூட்டி விலங்குகளின் உடல் பகுதிகளில் வெப்பநிலையானது 16 - 25 பாகை செல்சியஸ் வரை காணப்பட வேண்டும். அதுவே விலங்குகளின் உடல் நிலை சிறந்த ஆரோக்கியமாகக் காணப்படுகின்றது என்பதற்கான அறிகுறியாகக் காணப்படும். ஆனால் 2100 காலப்பகுதியில் புவியின் மேற்பரப்பு வெப்பநிலை 1.4 - 5 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது. அவ்வாறு அதிகரிக்கும் போது பாலூட்டி விலங்குகளின் உடல் பகுதிகள் பாதிக்கப்படுவதுடன் அவை அடிக்கடி நோய்வாய் படும் தன்மை அதிகரிக்கும்.

வெப்ப வலய சூழலை வாழ்விடமாகக் கொண்ட விலங்குகளின் உடலியல் வெப்ப நிலைக்கும் இடை வெப்பம் மிதமான வெப்பநிலை கொண்ட பகுதிகளில் வாழ்கின்ற விலங்குகளின் உடலியல் வெப்ப நிலைக்கும் ஏற்றா போல் அவற்றின் உடலியல் கூறுகள் இசைவாக்கம் அடைகின்றன. இவ்வாறே உயிரினங்கள் தம்மை பாதுகாத்துக் கொள்கின்றன . ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள சூழல் மாற்றங்கள், அவ் உயிரினங்களால் ஏற்றுக்கொள்ள முடியாததாகக் காணப்படுகின்றது. குறிப்பாக தம்மைக் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கப்படுத்திக்கொள்ள அவற்றுக்கு போதிய அளவான கால அவகாசம் கிடைப்பதில்லை. குறுகிய காலப்பகுதியில் காலநிலை மாற்றத்தின் தன்மை மாறுபடுவதால் அதனையும் எதிர்கொள்ள முடியாது நிலை அவ் உயிரினங்களைக் களைப்பு அடையச் செய்கின்றது அல்லது மரணத்திற்குக் கொண்டு செல்கின்றது. எடுத்துக்காட்டாகக் கடந்த காலங்களில் எமது நாட்டில் 2022இல் வடகிழக்கு பகுதியில் இடம்பெற்ற வளிமண்டல மாற்றம் (கடுமையான குளிர்) பல கால்நடைகளின் உயிர்களைப் பறித்தது.

அடிக்கடி ஏற்படுகின்ற காலநிலை மாற்றச் செயல்பாடுகள் விலங்குகளின் உடலில் மேற்பரப்பு வெப்பநிலையையும்,சுவாச விகிதத்தையும், இதயத்துடிப்பின் அளவையும், மலக்குடல் செயற்பாட்டையும் , இனப்பெருக்க திறனையும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. குறிப்பாக வெப்பநிலை அதிகரிப்பு நிகழ்ந்தால் உடல் வளர்ச்சி சுரப்பிகள் , பாலின சுரப்பிகள் நோய் எதிர்ப்பு அமைப்புகள் என்பன விலங்குகளில் பாரியளவான மாற்றத்தைச் சந்திக்கும்.

உதாரணமாக 25-26 செல்சியஸ் வெப்பநிலை காணப்படுகின்ற பிரதேசத்தில் வாழ்கின்ற விலங்கு 30 பாகை செல்சியஸ் வெப்பநிலை காணப்படும் அல்லது அதற்கு மேற்பட்ட வெப்பநிலை காணப்படும் சூழலில் வாழ வேண்டிய சூழ்நிலை காணப்படுமாயின். அவற்றின் பால் உற்பத்தி வீழ்ச்சியையும். ஆடுகளின் (Dairy goats) பால் உற்பத்தியில் 22 தொடக்கம் 35 வீதமான பால் உற்பத்தி குறைவடையும் அதேசமயம் எருமை மாடுகளின் (Buffalo heifers )பால் உற்பத்தியில் 8 தொடக்கம் 10 விதமான பால் உற்பத்தி குறைவடையும்.

வெப்பநிலையால் ஏற்படுகின்ற தாக்கத்தினை கட்டுப்படுத்திக் கொள்ள விலங்குகள் தமது உணவு உண்ணும் செயற்பாட்டைக் குறைத்துக் கொள்ளும். அவ்வாறு செய்யும் பொழுது அவை தம்முடைய உடல் அமைப்பின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கின்றன. Ruminants உடல் அமைப்பைக் கொண்டு விலங்குகள் இச்செயல் முறையை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. இவற்றின் செரிமான அமைப்பில் நச்சு நிறைந்த தாவர பொருட்கள் சமிபாடு அடையச் செய்யும் பொழுது, அவற்றிலிருந்து வெளியேறும் வாயுக்கள் தடுக்கப்படும். இவ்வாயுக்கள் உடல் வெப்பநிலையை அதிகரிக்கச் செய்யும் இதற்காகக் கால்நடைகள் உணவு உண்ணும் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் அல்லது குறைத்துக்கொள்ளும்.

வெப்ப தாக்கத்தினால் உடலில் இழக்கப்படும் நீரின் அளவை கட்டுப்படுத்துவதற்காக விலங்குகள் உமிழ்நீர் உற்பத்தியைக் குறைக்கின்றன. இதன் மூலம் விலங்குகளின் ஆரோக்கியம் பாதிப்புக்கு உள்ளாகும். விலங்குகள் தீவிர நீர் இழப்பைச் சந்திக்கும் போது, நுரையீரல் வழியாக காபனீரொட்சைட் வெளியேற்றம் அதிகரிக்கும். இது இரத்தத்தில் கார்போனிக் அமிலத்தின் செறிவைக் குறைத்து விடும். இதன் காரணமாக அல்கலோசிஸ் (Alkalosis) அமிலத்தன்மையின் நோய் தாக்கம் அதிகரிக்கும். இச்செயற்பாடு விலங்குகளுக்கு எரிச்சல் தன்மையை ஏற்படுத்தும். இவ் எரிச்சல் தன்மை விலங்குகளின் உணவு உட்கொள்ளும் திறனைக் குறைத்து உணவில் விருப்பமின்மையை ஏற்படுத்தும்.விலங்குகளின் உடல் நிலை சோர்வடைவதற்கும் உற்பத்தித் திறனைக் குறைத்துக் கொள்வதற்கும் இனப்பெருக்க செயல்முறையும் கட்டுப்படுத்துவதற்கும் காரணமாக அமைந்து விடும்

வெப்ப நிலை அதிகரிக்கும் போது பறவையின் குஞ்சு பொரித்தல் செயன்முறை கட்டுப் படுத்தப்படும். அதிக வெப்பநிலை காரணமாக முட்டையில் காணப்படும் நீரின் அளவு குறைவடையும் இதனால் முட்டைகளின் உயிர்ப்பு காலம் குறைவடைந்து குஞ்சி பொரித்தல் செயன்முறை பாதிப்புக்குள்ளாகும். அயனமண்டல நாடுகளில் காணப்படும் பறவைகளின் முட்டைகள் வழமையான குஞ்சு பொரித்தல் காலத்திற்கு முன்பே குஞ்சு பொரித்தல் செயன்முறை நிகழ்வுக்கு உட்படும். இதனால் அப்பறவைகளின் வாழ்க்கை வட்டம் பாதிப்புக்குள்ளாகும். இச் செயற்பாடு பாலைவனம் சார்ந்த பகுதிகளில் இடம் பெறுமாயின் முட்டைகள் குஞ்சு பொரிப்பதற்கு முன்பே இறப்பு நிலையை அடைவதற்குக் காரணமாக அமைந்துவிடும்.

காலநிலை மாற்றத்தால் படிவு வீழ்ச்சியில் ஏற்படும் மாற்றம் கால்நடை வளர்ப்பில் பாரிய அளவிலான தாக்கம் செலுத்தும். மேற்பரப்பு நீர் இருப்பை தீர்மானிக்கும் படிவு வீழ்ச்சி செயற்பாடு கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களை வளப்படுத்துவதில் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றது மேய்ச்சல் நிலங்கள் பசுமை போர்வையாகக் காணப்படுவதற்கும் வறண்ட தன்மையில் காணப்படுவதற்கும் இதுவே காரணமாக அமைகின்றது. படிவு வீழ்ச்சி அளவு குறைவடைந்து சென்றால், மேய்ச்சல் நிலங்களில் காணப்படும் புல் இனங்கள் சோர்வாக அல்லது வாடிய நிலையில், காணப்படும் அவ்வாறான புல் இனங்களைக் கால்நடைகள் உண்பதற்கு ஏற்றது அல்ல. எனவே, அவற்றுக்கான உணவுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை மானுட குலத்தைச் சாரும். இதற்காக மனித சமூகம் பெரிய அளவில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இதனைத்தொடர்ந்து, கால்நடைகளுக்கான நீர் தேவையைப் பூர்த்தி செய்தல் மிகவும் சிரமமான விடயமாகப் பண்ணையாளர்களுக்குக் காணப்படும். நீர் தேவை, மேய்ச்சல் தேவைகளைக் கருத்தில் கொண்டு விலங்குகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்தப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகும். கால்நடை உணவினை உற்பத்தி செய்யும் நாடுகள் மூலதன செலவுகளை அதிகரிக்கும் . இதனால் அவற்றின் ஊடாக பெற்றுக் கொள்ளும் உணவுப் பொருட்கள் விலையுயர்ந்த பொருட்களாகவும், கேள்வி நிறைந்த உணவுகளாகவும் மாற்றம் பெறும். உணவு நுகர்தல் செயற்பாட்டில் சமநிலை தன்மை உலக அளவில் ஏற்படும். படிவு வீழ்ச்சியில் ஏற்படும் மாற்றம் புறச்சூழல் வெப்பநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும். விலங்குகளின் வேர்வை சுரப்பிகள் தொடர்பான நோய்கள் தோன்றும் அது மட்டுமின்றி சுவாசம் சார்ந்து நோய்கள் மிகவும் இலகுவாக விலங்குகளிடையே பரவத்தொடங்கும்.

படிவு வீழ்ச்சியில் ஏற்படுகின்ற மாற்றம் நோய் பரவல் தன்மையை அதிகரிக்கின்ற போது அவற்றைக் கட்டுப்படுத்தும் முறை கண்டுபிடிக்கப்பட்டாலும் அவற்றைச் செயல்படுத்த முடியாத விடயமாகக் காணப்படும். படிவு வீழ்ச்சியில் அடிக்கடி ஏற்படுகின்ற மாற்றம் நோய் பரவலுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிற்கான மருந்துகளைக் கண்டறிந்து அவற்றைக் கால்நடைகளுக்குச் செலுத்தி நோய் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல் என்பது இயலாத காரியம் ஆகிவிடும். குறிப்பிட்ட பிரதேசத்தில் காலநிலை தன்மைக்கு ஏற்ப தமது வாழ்க்கை வட்டத்தை நடத்தும் உயிரினங்களின் செயல்பாடு தீவிர காலநிலை மாற்றத்தால் பாதிப்புக்கு உள்ளாகி அவற்றின் வாழ்க்கை வட்டம் கட்டுப்படுத்தப்படும் உதாரணமாக ஆலங்கட்டி மழையும் பனித்துளி தாவர இலைகளில் விழும்போது தாவர உடல்கள் பாதிக்கப்படும் இதனால் மேய்ச்சல் இனத்துக்குரிய புல்லினங்கள் மற்றும் பயிர்கள் அழிவடைந்து போகும். இவை அழிவதனால் விலங்குகளின் மேய்ச்சல் நடவடிக்கை என்பது உடனடியாக பாதிக்கப்படும். அதேபோன்று உறைபனி செயல்பாடு அதிகரிக்கும் போது மேய்ச்சல் நிலத்தில் காணப்படுகின்ற தாவரங்கள் மீது பனிப் படிவு காணப்படும் தொடர்ச்சியாக அவை காணப்படுமாயின் அவற்றைக் கால்நடைகளால் உண்பது சாத்தியமற்ற நிகழ்வாக மாறிவிடும். இதனால் மேய்ச்சல் திறன் என்பது கால்நடைகளிடம் குறைவாகவே காணப்படும். ஆனால் தமது உணவு தேவைக்காக அக்கால்நடைகள் அதிகமான நேரம் மேய்ச்சலில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்படும். அதே சமயம் அவை தமது உணவுக்காக நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய தேவையும் ஏற்படும். இது அவற்றைக் களைப்படையச் செய்வதுடன் சோர்வு தன்மையையும் ஏற்படுத்தி விடும். இதனால் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு கால்நடைவளர்ப்பு பாரியதொரு பிரச்சனையாக உருவெடுத்து காணப்படும்.

(வெள்ளிக்கிழமை தொடரும்)



# இன்று மடுமாதா திருவிழா

எஸ்.றொசேரியன் லெம்பேட்

வரலாற்று சிறப்புமிக்க மன்னார் மருத மடுத் திருப்பதியில் மடுமாதா திருவிழா இன்று வியாழக்கிழமை (15) வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது.

மடு திருப்பதி புனித மரியாளின் பெயரில் இலங்கையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஒரு திருத்தலமாகும். அந்த வகையில் மரியன்னை விண்ணேற்றம் அடைந்த திருநாளில் ஒவ்வொரு வருடமும் இத் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும்.

திருவிழா திருப்பலி எதிர்வரும் 15ஆம் திகதி வியாழன் 6.15மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் நிறைவேற்றப் படவுள்ளது.

நாட்டின் ஏனைய மறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள், குருக்கள் ஆகியோரின் பங்கேற்புடன் திருவிழாக் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட உள்ளது.

திருவிழா நிகழ்வுகள் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ். ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் கடந்த 6ம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15ம் திகதி காலை திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மடு திருப்பதி சுமார் 500 ஆண்டுகளுக்கு மேல் பழமையான திருத்தலமாகும். தமிழ் சிங்கள மக்களின் விசுவாசத்திற்கு உரிய வழிபாட்டுத் தலமாக இது திகழ்கிறது.வருடா வருடம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் மடு திருவிழாவில் கலந்து கொண்டு வருகின்றனர்.

திருவிழா திருப்பலியில் சுமார் 8 இலட்சம் மக்கள் வரை கலந்து கொள்வர்.


## மடுத் திருப்பதியின் வரலாறு:

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலப் பகுதியோடு தான் மடுத்திருப்பதியின் வரலாறும் ஆரம்பமாகின்றது. மன்னாரில் இருந்து 10 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் மாந்தை என்ற கிராமத்தின் ஆலயம் தான் மடுமாதா திருச்சுருபத்தின் ஆரம்ப இருப்பிடமாகும். 'செபமாலை மாதா' என்று அழைக்கப்பட்ட அந்தத் திருச்சுருபம் தான் இன்றைய மடுமாதா. ஒல்லாந்தருடைய ஆட்சியில் கத்தோலிக்கருக்கு எதிராகக் கொடூரமான வேத கலாபனை ஆரம்பித்தது. இந்தக் கலா பனையில் இருந்து தங்களைக் காப்பாற்றும் பொருட்டும் செபமாலை மாதாவின் திருச் சுருபத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் மாந்தை மக்கள் அங்கிருந்து புறப்பட்டனர்.குருக்களின் துணையில்லாத அந்த வேளையிலும் மாந்தையில் இருந்த 20 பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை மாதாவின் திருச்சுருபத்தைத் தூக்கிக் கொண்டு அடர்ந்த வன்னிக் காட்டில் புகுந்தனர்.

திசை தெரியாது அங்கும் இங்கும் அலைந்தனர். இறுதியாக 'மருதமடு' என்ற இடத்திற்கு எவ்வித ஆபத்தும் இன்றி மாதாவின் வழி நடத்தலோடு வந்து சேர்ந்தார்கள்.

மடுத் திருப்பதியின் அற்புத ஆற்றல் உலகறிந்த விடயமாகும். மடு அன்னையின் பரிந்துரையால் பல அற்புதங்கள் நடைபெறுகின்றன. அதனால் தான் இப் பகுதி நோக்கி மக்கள் இலட்சக் கணக்காகக் கூடுகின்றனர். பொன் விளையும் பூமி என்பது போல் மடு அன்னையின் திருப்பதியில் உள்ள மண் கூட மருந்தாகத் திகழ்கிறது. அந்த மண் அருள் நிறைந்த மண்! ஆற்றல் நிறைந்த மண்! இத்திருத்தல மண்ணுக்குச் சிறப்பான பெருமை உண்டு.உலகின் எங்குமே இல்லாத நிலையில் திருத்தலத்திலிருந்து பெறப்படும் மண் நோய் தீர்க்கும் அருமருந்தாக விளங்குகிறது.







இத்திருப்பதியின் வளாகத்திலிருந்து பெறப்படும் மண் ஆசீர்வதிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின் ஒரு மூலையில் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு தொட்டியில் வைக்கப்படுகின்றது. இந்த மண்ணை மக்கள் தம் வீடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

குணமளிக்கும் மருந்தாக இந்த மண்ணைப் பயன்படுத்துகின்றார்கள். 'கோயில் மருந்து' என்று இது அழைக்கப்படுகிறது.

மடுத் திருப்பதியின் புனிதத்திற்கு அருள் வளத்திற்கும் சிறப்பான ஒரு எடுத்துக்காட்டாக 'கோயில் மருந்து' என்று அழைக்கப்படும் இந்த மடு மண் அன்று தொடக்கம் இன்று வரை திகழ்கின்றது. பாம்பு தீண்டிய நிலையில் இங்கு கொண்டுவரப்படும் மக்கள் இப்பதியை அடைந்ததும் குணம் பெறுகின்றார்கள் என்பதும் மக்களின் ஆழமான விசுவாசமாகும்.

'கருணை மழை பொழியும் கானகச் செல்வி' என மடு அன்னை அழைக்கப்படுகிறார். குறைவுபடாது தாயன்புக்கு இலக்கணமாக இவள் விளங்குகின்றாள். துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் மத்தியில் மக்கள் ஆறுதல் தேடித் தஞ்சமடையும் தாயாக மடு அன்னை விளங்குகிறாள். தாயன்பு - அது தனி அன்பு அது தனித்துவமான அன்பு கூட.அம்மை அப்பனாக விளங்கும் இறைவனுடைய தாயன்பை திரு விவிலியம் தெளிவாகச் சொல்கிறது.

'நீங்கள் மார்பில் அணைக்கப் படுவீர்கள். மடியில் வைத்துச் சீராட்டப் படுவீர்கள். ஒரு தாய் தன் குழந்தையைத் தேற்றுவதுபோல நானும் உங்களைத் தேற்றுவேன்.' இறை தந்தையின் இத்தகைய அன்பையே மடு அன்னையும் பிரதி பலிக்கின்றாள்.

'பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்' என்று நம் ஆண்டவர் இயேசு கூறியதற்கிணங்க ஆண்டவன் இயேசுவின் தாயல்லவா நம் மடு அன்னை! தனயனின் அதே வார்த்தைகளைத் தாயும் கூறி அழைக்கின்றார். அந்த அன்னையின் அருகில் இருக்க,அவளது பாதத்தில் அமர்ந்து தம் குறைகளைச் சொல்ல, அவளது தாயன்பில் திளைத்திருக்க அவளது பிள்ளைகள் இலங்கையின் நாலா திசைகளிலிருந்தும் வந்து குவிகின்றார்கள். அன்னையிடமிருந்து ஆறுதலையும் தேறுதலையும் பெறுகின்றார்கள். மடுத்திருப்பதி ஒற்றுமையினதும் ஒன்றிப்பினதும் மத்திய நிலையமாகத் திகழ்கின்றது.

எக் குலத்தவராயினும், எம்மொழியினராயினும், எவ்வினத்தவராயினும் அனைவரும் இறைவனின் பிள்ளைகளே என்ற உணர்வுடன் இத்திருப்பதி அனைத்து மக்களையும் வரவேற்கின்றது.

இத் திருப்பதியின் நுழைவாயிலில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச்சுருபம் 'வரவேற்பு மாதா' என்று அழைக்கப்படுகிறது. மடு அன்னை இரு கரங்களையும் விரித்தவராய் தன் திருப்பதி நோக்கி வரும் அனைவரையும் தன் கைகளை நீட்டி அழைக்கும் தோற்றத்தோடு விளங்குவது கண்ணுக்கினிய காட்சியாகும். மக்கள் மத்தியில் மன்னிப்பு, ஒப்புரவு, சமாதானம் போன்ற உயர்ந்த விழுமியங்களை ஏற்படுத்துவதற்கு அவர்கள் ஒன்று சேரக்கூடிய ஒரே இடம் இந்த நாட்டில் மடுத்திருப்பதி தான்.

கன்னி மரியாள் களங்கமற்ற நீர்ச்சுனை. இறை மகனையே தன் உதரத்தில் சுமந்த திருப்பேழை. கடவுளையே தாங்கி நின்ற பதிர்ப் பாத்திரம். ஆன்மாவோடும் உடலோடும் விண்ணேற்றம் அடைந்த அன்னை மரியாவுக்கு மடுப்பதியில் பெருவிழா. அலகையை வென்று அகிலத்தைக் காத்த அந்த அன்னைக்கு இறைவன் அளித்த அன்புப் பரிசு அவரை விண்ணகத்திற்கு அழைத்துக்கொண்டது.

தாய் விண்ணேறிச் சென்றால் சேய்கள் நமக்கெல்லாம் அது பெருவிழா தானே! அதனால்தான் மடுத்திருப்பதி விழாக்கோலம் பூண்டு மக்கள் வெள்ளத்தில் நிரம்பி வழிகின்றது.

'மருதமடு மாதாவே மனுகுலத்தின் தாயாரே' என்ற கான வரிகள் காற்றில் என்றும் கலக்கட்டும். அதன் வழி மருதமடு தாயின் புகழ் என்றும் நிலைக்கட்டும்.








ஏழாலை அகரா

கவலை இரத்தத்தோடு கலந்து நரம்புகளின் ஊடாக உடல் முழுவதும் பாய்ச்சப்பட்டு கொண்டிருக்கிறது, கண்மடல்கள் இரண்டும் நீரில் மிதக்கின்றன, உதடுகள் விம்மி வெடித்து நடுங்கிக் கொண்டிருக்கின்றன. இரவு முழுவதும் தூங்காத அசதியும் ஒருபக்கம் உடலை ஏதோ பாடுபடுத்துகின்றது.

"ஐயோ! ஏன் இந்த வாழ்க்கை எனக்கு" என்று உரக்கச் சொல்லிக் கத்தி குழற வேண்டும் போல் உள்ளது என்று மனம் நினைக்க,

"வீட்டில் தான்.... யாரும் இல்லையே.... நினைப்பதுபோல் செய்து விடு" என்று மூளை நாசுக்கான விடையை தந்தது.

திருமணமாகி வீட்டை விட்டு விடைபெற்ற போது, தொடங்கிய கண்ணீர் இன்னும் தொடர் கதை தான்.

எத்தனை தான் காரணம் சொல்ல! புகைத்தலுக்கும் அடிமை, மதுவும் அவ்வப்போது, பொல்லாத சந்தேகப் புழுவாய்க்குள் இருந்து அடிக்கடி கொட்டும். சில நாட்கள் சம்பலும் சோறும், ஓரிரு தடவைகள் கோயில் அன்னதான சோறு தான். ஆனால், காசைக் கண்டால் கண்மண் தெரியாத செலவு.

உடுப்பு நடப்பு என்ன! சோறுகறி என்ன! சொல்லத் தேவையில்லை. வகைவகையாக வந்து சேர, சமைத்தும் அலுத்துப்போடும். என்ன மனுசனடா இவன்! என்று எண்ணும் அளவுக்கு ஒருநிலையில் நிற்காத மனம் படைத்த ஆண் இவன்.

அடுத்தவருக்கு உதவி என்றால் அணுவளவும் யோசிப்பதில்லை. அள்ளி இறைக்கவென்று ஆண்டவன் அனுப்பி வைத்த அதிசயப் பிறவி. ஊருக்கு மட்டும் தான் உபதேசம் ஆனால், வீட்டில் மனைவி பாடோ திண்டாட்டம். பிடிக்குமோ, பிடிக்காதோ என்று கேட்டால் வடிவேல் வசனம் போல, பிடிக்கும் ஆனால்... பிடிக்காது என்பதுதான் அவளின் மனநிலை.

சமாளிச்சு போவோம் என்று முடிவெடுத்து விட இரண்டு நாளில் மறுபடியும் தொடங்கிவிடும். எத்தனை நாள் பொறுப்பதென்று ஒருநாள் எடுத்தெறிந்து பேசிவிட்டு உடுப்புபையோடு அம்மா வீட்டிற்கு போய் சேர நான்கு நாட்களாக ஒவ்வொருத்தரும் சுற்றி இருந்து ஆறுதல் சொல்லி கூட்டி வந்து சேர்த்து விட்டு சேர்த்து வைத்த குற்றத்திற்கு தாங்களும் சொல் வடுக்களை வருத்தத்தோடு, சுமந்துகொண்டு பெண் வீட்டார் எனும் முறையில் பொறுமையாய் வீடுபோய் சேர்ந்தனர்.

அவள் அடங்காத வாய்க்காரி, கோபமும் கொட்டிக் கிடக்கிறது. பெண்ணியம் பேசுபவள், பெண்மையை வீரமாய் எண்ணுபவள். நேர்த்தியான பேச்சுக்கும் ஆடம்பரம் இல்லாத ஆடை அணிகலன்களுக்கும் சொந்தக்காரி. ஆனால், இப்போது எல்லாம் மாறிப்போய் விட்டது. அவளின் உலகம் இப்போது தலைகீழாகத்தான் சுற்றிக்கொண்டிருக்கிறது.

அழுவதற்கு மூளை அனுமதி அளித்த பின்னர் உதடுகள் விரித்து "ஐயோ! அம்மா" என்று குளற கண்கள் தேக்கி வைத்திருந்த நீரை தாரைதாரையாக கொட்டுகின்றன. அப்போது தான் மூளைக்கு உறைத்தது பக்கத்து வீட்டு சனம் கேட்டா என்ன நினைக்கும் கொஞ்சம் அடக்கி அழு என்று. தனக்குள் விம்மிவெடித்த சொற்களை கொட்டிகொட்டி அழுகிறாள். "ஏன் என்ர தலை விதி இப்படி இருக்கிறது... நான் என்ன பாவம் செய்தேன்... நான் எப்படியெல்லாம் வாழ நினைத்து இப்படி வந்து கிடந்து சாகுறனே..! இனி முடிவு சரியாத்தான் எடுக்கவேணும்.... வேண்டாம் எண்டா வேண்டாம் தான்... சனம் கதைச்சா கதைச்சிட்டு போகட்டும். பொம்பளைகள் இப்படித்தான் வாழவேண்டும் என்றால், அந்த வாழ்க்கையே எனக்குத் தேவையில்லை. தனியாகவே வாழ்ந்து விட்டு போகலாம்" என்று ஏதோவெல்லாம் ஒப்புச்சொல்லி அழுகிறாள். கதவு நீக்கலுக்குள்ளால் யாரோ எட்டிப்பார்க்க திகைத்துப் போய்நின்றாள். நீக்கலை விலக்கிக்கொண்டு ஓடிவந்தது அவள் பாசமாய் வளர்க்கும் குட்டிநாய். கோழிகளை துரத்தி விளையாடிக்கொண்டிருந்த நாய்க்குட்டிக்கு அவளின் அழுகை கேட்டிருக்க வேண்டும் ஓடிவந்து மேலே பாய்ந்து மடிக்குள் ஏறிக்கொண்டது. எதையோ சொல்லத் துடித்து மொழி இல்லாததால் மூசுகிறது. மாறிமாறி அவள் கன்னங்களில் வழிந்து ஓடும் கண்ணீரை நக்குகிறது. கால்களை உயர்த்திகட்டி அணைத்து ஆர்ப்பரிக்கிறது. நாயின் விசுவாசம் கண்டு வியந்தவள், மனிதரை விட ஆயிரம் மடங்கு உசத்தி நீ என்று சொல்லிகட்டி அணைத்து கொஞ்சுகிறாள். பெற்றெடுக்காத குழந்தை ஒன்று பாஷையும் தெரியாமல் தன் துக்கத்தில் பங்கு கொண்டதை எண்ணி நாய்க்குட்டியை இறுக்கமாய் அணைக்கிறாள்.

இன்னும் அந்த வசனங்கள் அவளுடைய காதுகளில் சில்வண்டு போல் இரைந்து கொண்டே இருக்கின்றன. "நான் ஏன் சீதனம் கொடுக்க வேணும்! எனக்குத்தான் ஆம்பளைகள் சீதனம் தந்து கட்ட வேண்டும்" என்று வீட்டிலே முன்பொருநாள் சொல்லி சிரித்தது மனத்திரையில் மறு ஒளிபரப்பு செய்யப்படுகிறது. மாப்பிள்ளையை நேரில் பார்த்ததும் பிடித்தது,

"உங்கள் சுதந்திரத்தில் நான் தலையிடமாட்டேன் என் சுதந்திரத்தில் நீங்களும் தலையிடக் கூடாது"

என்பதை மட்டும் தாயின் முந்தானை கரையில் நின்று கோயில் வாசலில் வைத்து சொன்னவன் தான், இன்று என் கண்ணீருக்கு காரணம் என்பதை எண்ண சதிரம் எல்லாம் அனலாய் கொதிக்கிறது. எத்தனை சண்டைகள் இதுவரை வந்த போதும் இப்படி ஒரு நாளும் அவன் கேட்டதில்லை. மது அருந்திவிட்டு பேசினாலும் நிதானமாகத்தான் பேசினான். மனதிற்குள் இருந்தது தானே வெளிப்பட்டிருக்கும்.

யாரோ இதைப்பற்றிப்பேசி ஏற்றி விட்டு இருக்கலாம்... என நினைத்த மறுகணமே மாமி கண்முன்னே தோன்றினார். "சீதனத்தின் மிச்சக் காச இப்பவே வைக்கோணும்" என்று அவன் சொன்னபோது, அவள் இவ்வளவு நாளாக அவன் மீது கட்டிவைத்திருந்த நம்பிக்கை கோபுரம் சடசடவென இடிந்து விழுந்தது. "காசு இல்லாமல் தான் சண்டை பிடிக்கிறான் வீட்டில எப்பமிச்ச சீதனக் காசைத் தருவினம் எண்டு தவணை கேளுங்கோவன்" என அடுத்த தாய்மாமி சொன்னபோது, இத்தனை நாள் அவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை வேர் அடியோடு கிளறப்பட்டு விட்டது. திருப்பி கதைக்க வார்த்தைகள் இல்லாமல் திணறியவள், "அவர ஒழுங்கா இருக்கச் சொல்லுங்கோ அதுக்கு பிறகு சீதனத்தை கேளுங்கோ" என முகத்தில் அடித்தாற்போல் சொல்லி விட்டாள்.

இரவு முழுவதும் எதுவோ கேட்க கூடாதவற்றை காதுகள் கேட்டு விட்டது போல் நரக வேதனையில் துடித்தாள். தன் உணர்வுகளை தானேகொன்று உயிரை மாய்த்து விட்டாலும் ஒன்றும் ஆகாது என நினைத்தாள். இன்று நான் செத்தாலும், நாளை இன்னொரு பெண். முன்பெல்லாம் காதல், அன்பு, உறவு, என்று இருந்த வாழ்க்கை இன்று நகை, பணம், சீதனம் என மாறி விட்டது.

சூரியன் சுட்டெரிக்க தொடங்கியும் அவள் உலகம் இருண்டே கிடந்தது. காலையில் ஒவ்வொருவராய் வீட்டை வீட்டு விடைபெற்றுச் செல்ல, அகன்ற சொகுசு நாற்காலியில் உடலை அடக்கி அமர்ந்து தனிமையை முழுமையாய் சுவாசித்து அடக்கிய உணர்வுகளை அழுகையால் கொட்டி தீர்த்தவள், அறுபது ஆண்டுகளுக்கு முன் அம்மாவின் காதிலே ஒரு தோட்டுக்குச்சியேனும் இல்லாதபோதும் காதலித்து கரம்பிடித்த தன் தந்தை இன்று வரை எத்தனை சண்டை சச்சரவுகள், விவாதங்கள், பிரிவுகள், துக்கங்கள், மகிழ்ச்சிகள், கொண்டாட்டங்கள், பயணங்கள் என்று கடந்து வந்தும் ஒரு தடவையேனும் சீதனம் எனும் வார்த்தையை உச்சரிக்காததை எண்ணி வியப்பும் பெருமூச்சும் விட்டுக்கொண்டாள்.

அவள் உலகில் இத்தனை வருடங்களாக வில்லனாகவும், கோபக்காரனாகவும், முரட்டுத்தனமானவராகவும் மட்டுமே குடியிருந்த அப்பா அந்தக் கணத்திலிருந்து நாயகனாய் முடிசூட்டிக் கொள்கின்றார். (முற்றும்)

ரஷ்யாவின் 1,000 சதுர கிலோ பரப்பு

# உக்ரைன் வசமானது



கடந்த 2 ஆண்டுகளாக போர் நீடித்து வரும் நிலையில், தற்போது ரஷ்யாவின் ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவை உக்ரைன் படைகள் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன என அந்நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. நவீன இராணுவ தளபாடங்களோ, நிதி வசதியோ இல்லாத உக்ரைன் இராணுவத்தை போர் தொடங்கிய சில நாட்களிலேயே பின்னுக்குத் தள்ளி ரஷ்யா முன்னேறியது. உக்ரைன் நாட்டின் சில மாநிலங்களை ரஷ்யப் படைகள் ஆக்கிரமித்துள்ளன. இலட்சக்கணக்கான சதுர கிலோமீட்டர் பரப்பை ரஷ்ய இராணுவத்திடம் இழந்த உக்ரைன், இப்போது தான் பதிலுக்கு வேலையை காட்டத் துவங்கியுள்ளது.

இந்நிலையில், ரஷ்யா எதிர்பார்க்காத இடத்தில், திடீர் தாக்குதல் நடத்திய உக்ரைன் படைகள், குர்ஸ்க் மாநிலத்தில் ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

அத்துடன், ரஷ்ய மக்களின் 74 குடியேற்ற பகுதிகளை உக்ரைன் கைப்பற்றியுள்ளதாக அந்நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் உறுதி செய்தார்.

இதற்கிடையே, ரஷ்யாவில் உக்ரைன் படைகள் முன்னேறி வருவது குறித்து, ஜனாதிபதி புட்டின் கூறுகையில், “மேற்கு நாடுகளின் ஆதரவுடன் இந்த தாக்குதலை உக்ரைன் அரங்கேற்றி உள்ளது. அப்பாவி ரஷ்ய பொதுமக்கள் மீதும், அணுமின் நிலையங்களின் மீது உக்ரைன் தாக்குதல் நடத்துவது ஏற்புடையது அல்ல. எதிரிகளை அடித்து துரத்தவும், ஆக்கிரமிப்பு பகுதிகளை மீட்கவும் ரஷ்ய இராணுவம் முன்னேறி வருகிறது” என்று அவர் தெரிவித்தார்.

நிவ்யோர்க்

## மனைவிக்கு சிலை வைத்தார் மார்க் ஸுக்கர்பெர்க்



மனைவிக்காக சிலை வைத்த மார்க் ஸுக்கர்பெர்க்-க்கு சமூக ஊடகங்களில் பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

மெட்டாவின் தலைமை நிர்வாக அதிகாரியான மார்க் ஸுக்கர்பெர்க், தனது காதல் மனைவி பிரிசில்லா சானின் மாபெரும் சிற்பத்தை அவர்களது வீட்டின் பின்புறத்தில் நிறுவியுள்ளார். இது சம்பந்தமான புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில்தில் பரவிய நிலையில், பலரும் அவருக்கு பாராட்டுக்களைக் குவித்து வருகின்றனர்.

இந்த சிற்பம் நிவ்யோர்க் நகரத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற சிற்ப கலைஞர் டேனியல் அர்ஷம் என்பவரால் உருவாக்கப்பட்டது.

இச்சிலையானது, அவரது கையொப்ப பாணியை பிரதிபலிக்கின்றதோடு, கட்டிடக்கலை, சிற்பம் மற்றும் செயல்திறன் கலை ஆகியவற்றின் பெருமைகளை பேசுகின்றது என பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

நிவ்யோர்க்

## கடுமையான வெப்பத்தால் குழந்தைகளுக்கு பாதிப்பு



மோசமான வெப்ப அலையால் கோடிக்கணக்கான குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவில் உள்ள குழந்தைகள் வெப்பத்தால் அதிகம் பாதிக்கப்படுவதாக புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன. கிட்டத்தட்ட 12.3 கோடி குழந்தைகள் ஒவ்வொரு வருடமும் மூன்றில் ஒரு பகுதியில் 95 டிகிரி அல்லது அதற்கு அதிகமாக வெப்பத்தை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஏறக்குறைய 50 கோடிக்கு அதிகமான குழந்தைகள் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு மடங்கு அதிக வெப்பத்தை எதிர்கொள்வதாகவும் அது அவர்களது மூத்த சந்ததியினர் எதிர்கொண்டதை விட அதிகம் என ஐ.நா எச்சரித்துள்ளது.

மேலும், உலக அளவில் வெப்ப நிலை உயர்ந்து வரும் நிலையில் 5இல் ஒரு குழந்தை 60 வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட இரண்டு மடங்கு வெப்பத்தை ஒவ்வொரு வருடமும் எதிர்கொள்வதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது.

அதேசமயம், பெரியவர்களை விட குழந்தைகள் வெப்ப அலையால் மிக எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள் என யுனிசெஃப் நிறுவனம் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்னை

## அந்தரங்க உறுப்பை அறுத்து கொலை



திரையரங்கில் ஏற்பட்ட மோதலில் தனுஷ் ரசிகரின் ஆணுறுப்பை அறுத்து கொலை செய்த சம்பவம் ஒன்று சென்னையில் இடம்பெற்றுள்ளது.

சென்னை ஓட்டேரியைச் சேர்ந்தவர் சிராஜ். நடிகர் தனுஷின் தீவிர ரசிகரான இவர், தொழிலுக்கு செல்லாமல் மது அருந்தி ஊர் சுற்றி வந்துள்ளார். இதனால் விரக்தியடைந்த இவரது மனைவி, தனது மூன்று குழந்தைகளுடன் பிரிந்து சென்று விட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு சிராஜ் தனது நண்பர்கள் சிலருடன் அப்பகுதியில் உள்ள திரையரங்கொன்றில் அண்மையில் நடிகர் தனுஷ் நடித்து இயக்கிய ராயன் திரைப்படத்தை பார்ப்பதற்காக சென்றுள்ளார்.

அப்போது, மதுபோதையில் திரையரங்குக்குள் நண்பர்களிடையே மோதல் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் ஏற்பட்ட முன்பகையால் ஆத்திரத்தில் இருந்த சிராஜ் நண்பர்கள், கடந்த 13ஆம் திகதி மாலை மதுபோதையில் இருந்தபோது, சிராஜை தாக்கி அவரது பற்களை உடைத்து அவரை இழுத்துச் சென்று அங்குள்ள கட்டிடம் ஒன்றில் அடைத்து அவரது அந்தரங்க உறுப்பை அறுத்து கொடூரமாக கொலை செய்துள்ளனர்.

இதுகுறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார், உடலைக் கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். மேலும், கொலை தொடர்பாக வழக்கு பதிந்து சிராஜின் நண்பர்கள் இருவரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

புதுடெல்லி

## உப்பு, சீனியில் பிளாஸ்டிக்



இந்தியாவில் விற்பனை செய்யப்படும் அனைத்து நிறுவனங்களின் சீனி மற்றும் உப்புகளில் மைக்ரோ பிளாஸ்டிக்குகள் இருப்பதாக சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

Toxics Link என்ற சுற்றுச்சூழல் ஆராய்ச்சி அமைப்பு நடந்திய இந்த ஆய்வில், இந்தியாவில் விற்பனை செய்யப்படும் அனைத்து நிறுவன சீனி மற்றும் உப்பில், நுரையீரல் பாதிப்பு, மாரடைப்பு, உடல் எடை கூடுதல் உள்ளிட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தும் மைக்ரோ பிளாஸ்டிக்கள் எனப்படும் நுண் பிளாஸ்டிக் துகள்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தூள் உப்பு, கல் உப்பு என இரண்டிலும் இந்த துகள்கள் உள்ளனவாம். இணையம் மூலமாகவும், கடைகளிலும் வாங்கிய சீனி, உப்பு வகைகளை அந்நிறுவனம் ஆய்வுக்கு உட்படுத்தி இந்த அறிக்கையை தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில்

# முன்னேறினார் றோஹித் ஷர்மா

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு இந்தியாவின் அணித்தலைவர் றோஹித் ஷர்மா முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கெதிரான மூன்றாவது போட்டியில் 35 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தை ஷர்மா அடைந்துள்ளார்.

குறித்த போட்டியில் 45 ஓட்டங்களைப் பெற்ற இலங்கையின் பதும் நிஸங்க, ஒன்பதாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.பாபர் அஸாம், 2.றோஹித் ஷர்மா, 3.ஷுப்மன் கில், 4.விராட் கோலி, ஹரி டெக்டர், 6.டரைல் மிற்செல், 7.டேவிட் வோர்னர், 8.பதும் நிஸங்க, 9.டேவிட் மலன், 10. றஸி வான் டர் டுஸன்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.கேஷவ் மஹராஜ், 2.ஜொஷ் ஹேசில்வூட், 3.அடம் ஸாம்பா, 4.குல்தீப் யாதவ், 5.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ், 6.மொஹமட் நபி, 7.ஷகீன் ஷா அஃப்ரிடி, 8.ஜஸ்பிரிட் பும்ரா, 9.ட்றெண்ட் போல்ட், மொஹமட் சிராஜ்.

முதல் ஐந்து சகலதுறை வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.மொஹமட் நபி, 2.ஷகிப் அல் ஹஸன், 3.சிகண்டர் ராசா, 4.அசாட் வலா, 5. ரஷீட் கான்.

இங்கிலாந்து டெஸ்ட் சுற்றுப்பயணத்திற்கான

## இயன் பெல் பயிற்சியாளர்




இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கான இலங்கையின் துடுப்பாட்டப் பயிற்சியாளராக இங்கிலாந்தின் முன்னாள் துடுப்பாட்டவீரர் இயன் பெல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிராக மூன்று டெஸ்ட் போட்டிகளில் இலங்கை விளையாடவுள்ள நிலையில், இத்தொடர் முடிவு வரையில் பெல் பணியாற்றவுள்ளார்.

## புனித சேவியர் கல்லூரி முதலிடம்





அஸ்ஹர் இப்றாஹீம்

மன்னார் வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான “செயற்பட்டு மகிழ்வோம்” நிகழ்வில் மன்னார் புனித சேவியர் கல்லூரி ஆண்களுக்கான தரம் 3, 4 , 5 ஆகிய பிரிவுகளில் முதலிடம் பெற்று சாதனை படைத்து மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



புத்தளம் ஜெயா பார்ம் கால்பந்தாட்டத் தொடர்

# அடுத்த சுற்றில் போல்டன்

எம்.யூ.எம்.சனூன்

புத்தளத்தில் புத்தளம் கால்பந்தாட்ட லீக் தொடராக நடாத்தி வருகின்ற ஜெயா பார்ம் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அடுத்த சுற்றுக்கு புத்தளம் நகரின் மிகப் பழைமை வாய்ந்த போல்டன் கழகம் தகுதி பெற்றுள்ளது.

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் சனிக்கிழமை (10) நடைபெற்ற நாகவில்லு எருக்கலம்பிட்டி அணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே அடுத்த சுற்றுக்கு போல்டன் தகுதி பெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 15 ஆகஸ்ட் 2024, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.